*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*26 08 2025* *TUESDAY* *7.15 PM*
*ஆகாஷவாணி*

***தலைப்புச் செய்திகள்***

1. விநாயகர் சதுர்த்தி நாளை கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.
2. வலிமையான கிராமங்கள் திட்டம், நாட்டின் எல்லைப்புற பாதுகாப்பிற்கான முக்கிய அம்சமாக திகழ்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.
3. INS Udaygiri, INS Himgiri ஆகிய இரண்டு புதிய போர்கப்பல்களை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
4. ஆயுர்வேதா தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 23-ஆம் தேதியன்று கொண்டாடப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
5. ஆசிய துப்பாக்கிச்சூடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sift Kaur Samra தங்கப்பதக்கம் வென்றார்.

***இனி விரிவான செய்திகள்-***

<<<<<>>>>>>

விநாயகர் சதுர்த்தி நாளை கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், மிகுந்த அர்ப்பணிப்போடும் உற்சாகத்தோடும் கொண்டாடப்படும் விநாயகர் சதுர்த்தி திருவிழா, மக்களுக்கு அறிவையும், ஆக்கத்தையும் அளிக்கும் திருநாளாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தடைகளை கடந்து, புதிய பாதையில் செல்ல ஆண்டவனின் அருளை வேண்டும் நாளாகவும் விநாயகர் சதுர்த்தி அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

புதிய இலக்குகளை நேர்மறையான சிந்தனையுடன் அடைவதற்கான உற்சாகத்தை விநாயகர் சதுர்த்தி ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுற்றுச்சூழலையும், தூய்மையையும், பசுமையையும் பராமரிப்பதில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இந்நாளில் உறுதியேற்க வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

வலிமையான கிராமங்கள் திட்டம், நாட்டின் எல்லைப்புற பாதுகாப்பிற்கான முக்கிய அம்சமாக திகழ்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இத்திட்டம் தொடர்பான பயிலரங்கில் பேசிய அவர், எல்லைப்புற கிராமங்களில் உள்ள மக்கள் இடம்பெயர்வதை தடுப்பதோடு, மத்திய – மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பலன், எல்லைப்புற மக்களை முழுமையாக சென்றடைவதை உறுதி செய்வதாக கூறினார்.

இத்திட்டத்தின் வாயிலாக எல்லையோர கிராமங்களில் கட்டமைப்பு வளர்ச்சி ஊக்குவிக்கப்படுவதுடன், கலாச்சாரத்தை பேணி பாதுகாத்து சுற்றுலா வாயிலாக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் பேருதவியாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் எல்லையோர கிராமங்கள் துடிப்பாகவும், வலிமையாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், அரசின் திட்டங்கள் அவர்களை முழுமையாக சென்றடைந்தால்தான் பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் அவர்களுக்கு கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

*நாட்டின் எல்லைப்பகுதியில் வசிக்கும் மக்கள் பொருளாதார ரீதியாக வலிமையாக இருப்பது, எல்லைப்பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.*

*அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் தொடங்கப்பட்ட வலிமையான கிராமங்கள் திட்டம் நல்ல பலனை அளித்திருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.*

*<<<<<>>>>>>*

*இந்திய கடற்படையின் கிழக்கு மண்டலத்திற்கான INS Udaygiri, INS Himgiri ஆகிய இரண்டு புதிய முன்னணி போர்கப்பல்களை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.*

*விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், உற்பத்திக்கான இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியா இயக்கங்களுக்கு வலுசேர்க்கும் வகையில் இந்த இரண்டு போர்கப்பல்களும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.*

*கடற்படையை நவீனமயமாக்கும் முயற்சிகளை இந்தியா துரிதமாக மேற்கொண்டு வருகிறது என்றும், வலிமைமிக்க போர் கப்பல்களை உருவாக்குவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*முதல் முறையாக ஒரே நேரத்தில் இரண்டு போர் கப்பல்கள் கடற்படையின் பயன்பாட்டிற்கு வருவது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.*

*<<<<<>>>>>>*

*ஆயுர்வேத தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 23-ஆம் தேதியன்று கொண்டாட மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று இத்தகவலை தெரிவித்த அவர், நடப்பாண்டு முதல் இந்த நாளில் ஆயுர்வேதா தினம் கொண்டாடப்படும் என்று கூறினார்.*

*நடப்பாண்டுக்கான ஆயுர்வேதா தினத்தின் கருப்பொருள் ”ஆயுர்வேதம் மக்களுக்கும் -பூமிக்குமானது” என்ற அறிவிப்பையும் அவர் வெளியிட்டார்.*

*ஆயுர்வேதம் உடல்நல பராமரிப்புக்கான பாரம்பரிய முறை என்று கொள்ளாமல், தனி மனிதனுக்கும், சுற்றுச்சூழக்கும் இடையே நல்லிணக்கத்தை உருவாக்கும் அறிவியல் ரீதியான மருத்துவம் என்று குறிப்பிட்டார்.*

*கடந்த எட்டாண்டுகளில் வெவ்வேறு நாட்களில் ஆயுர்வேதா தினம் கொண்டாடப்பட்டு வந்ததாகவும், நடப்பாண்டு முதல் செப்டம்பர் 23 என்ற ஒரேநாளில் இதனை கொண்டாட முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.*

*<<<<<>>>>>>*

*இந்தியா – குவைத் 7-ஆவது வெளியுறவுத்துறை அதிகாரிகள் நிலையிலான ஆலோசனை கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.*

*இதுதொடர்பாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இருநாடுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய முயற்சிகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.*

*இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.*

*இருதரப்பு அரசியல், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*

*<<<<<>>>>>>*

*இந்தியா – ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் ஜப்பான் செல்ல உள்ளதாக வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 30-ஆம் தேதிவரை ஜப்பானில் தங்கியிருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் திரு Shigeru Ishiba-வுடன் இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து விரிவாக பேச்சு நடத்த இருப்பதாக கூறினார்.*

*வெளியுறவுத்துறையின் மேற்கு நாடுகளுக்கான செயலாளர் திரு Tanmaya Lal பேசுகையில், வரும் 31, மற்றும் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி சீனாவின் Tianjin நகருக்கு செல்ல இருப்பதாக தெரிவித்தார்.*

*<<<<>>>>>*

*தமிழக அரசின் திட்ட முகாம்கள் மூலம், தினந்தோறும் ஏராளமான பொதுமக்கள் மனுக்களை அளித்து உடனடியாக பயன்களை பெற்று வருவதாக மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*

*சென்னை வேளச்சேரியில் இன்று மாநில அரசின் முகாமை ஆய்வு செய்த அமைச்சர், அரசு திட்டங்களின் பயன்களை பெறுவதற்கான சான்றிதழ்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.*

*ஊரகப்பகுதிகளில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட இருப்பதாகவும், நகர்ப்புற பகுதிகளில் 3 ஆயிரத்து 700-க்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.*

*மாநிலத்தில் மொத்தமாக 10 ஆயிரம் முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டிருப்பதாகவும், இதுவரை 4 ஆயிரத்து 400 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*முகாம்கள் நடைபெறுகின்ற இடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் செய்து தரப்பட்டிருப்பதாகவும் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.*

*<<<<>>>>>*

*தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில், விநாயகர் சிலைகள் எவ்வித வேதிப்பொருளும் கலக்காமல் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டு வருகிறது.*

*இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் தாங்கள் தயாரிக்கும் விநாயகர் சிலைகளை காய்கறி, கீரை வகைகள், மரங்கள் ஆகியவற்றின் விதைகளோடு சேர்த்து தயாரித்து வருகின்றனர்.*

*இது மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதாக இளைஞர் குழுவை சேர்ந்த ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*<<<<>>>>>*

*இலங்கையில் அரசு நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள அந்நாட்டு முன்னாள் அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே-வுக்கு கொழும்பு நீதிமன்றம் ஜாமின் வழங்கியுள்ளது.*

*ரணில் விக்ரமசிங்கே உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதால், காணொலி வாயிலாக அவர் நீதிமன்ற விசாரணையில் ஆஜர்படுத்தப்பட்டார்.*

*<<<<>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sift Kaur Samra தங்கப்பதக்கம் வென்றார்.*

*கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*இதன் குழு பிரிவிலும் இந்தியாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.*

*மகளிர் ஜுனியர் 50 மீட்டர் பிரிவில் Anushka Thokur தங்கப்பதக்கம் வென்றார்.*

*இதன் குழு பிரிவிலும் இந்தியாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.*

*ஆடவர் 25 மீட்டர் பிரிவில் Sameer வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*-----------*

*காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 3 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.*

*---------------*

*உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*பாரிசில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 23-21, 21-6, என்ற செட் கணக்கில் பல்கேரியாவின் Kaloyana Nalbantova -வை வென்றார்.*

*இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஹெச் எஸ் பிரணாய் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<END>>>>>>*